இன்றைய செய்தி நாளைய வரலாறு
# முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 09.02.2026

# பா.ஜ.க. வந்தால் பற்றி எரியும்...

**பா.**ஜ.க. வந்தால் பற்றி எரியும் என்பதற்கு நிரந்தரமான எடுத்துக் காட்டாக இருக்கிறது மணிப்பூர் மாநிலம்.

**மூன்று ஆண்டுகளாக எரிகிறது மணிப்பூர். பா.ஜ.க. ஆளும் மாநிலம் அது. வன்முறையை அடக்க முடியாத நிலையில் ஆட்சியை விட்டு விலகினார் பா.ஜ.க. முதலமைச்சர் பிரேன் சிங். உண்மையில் பார்த்தால் அந்த ஆட்சியையே கலைத்திருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை ஒன்றிய பா.ஜ.க. தலைமை. சட்டமன்றத்தை முடக்கி வைத்திருந்தார்கள். சில நாட்களுக்கு முன்னால் மணிப்பூர் சட்டமன்றத்தை மீண்டும் செயல்பட வைத்தது பா.ஜ.க. தலைமை. மணிப்பூர் மாநிலத்தில் புதிய அரசு பதவியேற்ற நிலையில், அங்கு மீண்டும் வன்முறை வெடித்துள்ளது. லேசான அமைதி சிதைந்து, மீண்டும் பற்றி எரியத் தொடங்கி இருக்கிறது.**

மணிப்பூரில் 2023 ஆம் ஆண்டு இரண்டு சமூகங்களுக்கு இடையே கடுமையான மோதல் ஏற்பட்டது. கலவரத்தில் இதுவரை 260க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் தங்கள் வீடுகளை இழந்தனர். பல்லாயிரக்கணக்கானவர்கள் இடம் பெயர்ந்தார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் அந்த மாநிலத்தை விட்டு வெளியேறினார்கள். காவல் துறை மொத்தமாக செயல் இழந்தது. காவல் நிலையங்களில் இருந்த துப்பாக்கிகளை வன்முறை கும்பல் எடுத்துச் சென்றது. துப்பாக்கிகளைக் கொண்டு வந்து கொடுங்கள் என்று காவல் துறை அறிவித்த அவலம் மணிப்பூரில்தான் நடந்தது.

**பா.ஜ.க. முதலமைச்சர் பிரேன்சிங், செயல்படாமல் இருந்தார். பா.ஜ.க.வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் டெல்லிக்குச் சென்று பா.ஜ.க. தலைமையிடம் பா.ஜ.க. மாநில அரசையே குறை சொன்னார்கள். அதன்பிறகுதான் அக்கட்சியின் முதலமைச்சர் பிரேன்சிங் பதவி விலகினார். ஒன்று வேறு முதலமைச்சரை அப்போதே தேர்வு செய்திருக்க வேண்டும். அல்லது அந்தச் சட்டசபையை முழுமையாக கலைத்திருக்க வேண்டும்.**

மிகத் தந்திரமாகச் செயல்பட்டது பா.ஜ.க. தலைமை. எதிர்ப்புகளைச் சமாளிக்க இருந்த முதலமைச்சரை பதவி விலக வைத்து விட்டு, சட்டசபையை எப்போது வேண்டுமானாலும் செயல்பட வைத்து, பா.ஜ.க. ஆட்சியை மீண்டும் உருவாக்க நினைத்தார்கள்.

ஆறு மாதங்கள் குடியரசு தலைவர் ஆட்சி அமல் ஆனது. பின்னர் மீண்டும் ஆறு மாதத்துக்கு நீட்டித்தார்கள். கலவரம், வன்முறை ஓய்ந்துவிட்டதாக நினைத்து மீண்டும் ஆட்சி அமைக்க பா.ஜ.க. முயற்சித்தது.

மெய்தி, குகி இனங்களை சேர்ந்த பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள், கூட்டணி கட்சி மற்றும் சுயேச்சை எம்.எல்.ஏ.க்களிடம் பா.ஜ.க. மேலிட பொறுப்பாளர் கருத்து கேட்டார். பின்னர் டெல்லியில் உள்ள பா.ஜ.க. தலைமை அலுவலகத்தில் மணிப்பூர் பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நடந்தது. முதல்வர் பொறுப்பை ஏற்கும் வகையில், சட்டசபை தலைவராக ஒய்.கெம் சந்த் சிங் தேர்வு செய்யப்பட்டார்.

அவருடன் நெம்சா கிப்கென், லோசி திகோ ஆகியோர் துணை முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் குகி பழங்குடி இனத்தை சேர்ந்த முன்னாள் பெண் அமைச்சர் நெம்சா கிப்கென் துணை முதல்வராக சேர்ந்ததை பலரும் எதிர்க்கிறார்கள். பிறகு அவர்கள் பதவியேற்று கொண்டனர்.

குகி சமூகத்தை சேர்ந்தவர்கள், பா.ஜ.க. தலைமையிலான அமைச்சரவையில் இணைந்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். குகி சமூகத்தினர் பெரும்பான்மையாக வசிக்கும் பல பகுதிகளில் மக்கள் வீதிகளில் இறங்கி போராட்டத்தில் குதித்து இருக்கின்றனர். போராட்டக்காரர்கள் டயர்களுக்கு தீ வைத்ததோடு சாலை மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

ஆட்சி அமைக்க உரிமை கோரியபோது, குகி பழங்குடியின எம்.எல்.ஏ. என்.சனதே, ஜோ ஹமர் பழங்குடியின எம்.எல்.ஏ. எல்.எம். காவுதே ஆகியோர் உடன் இருந்தனர். சட்டசபை கூட்டத்தில் காணொலி காட்சி மூலம் பங்கேற்றனர். இதனை அந்த இன மக்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள். குகி, ஜோ ஹமர் பழங்குடியினத்தினர் பெரும்பான்மையாக வசிக்கும் சுரசந்த்பூர் மாவட்டத்தில் முழு அடைப்பு நடத்தப்பட்டது. கைகளில் கட்டைகளை ஏந்திக்கொண்டு மாவட்ட தலைநகரில் வாகனங்களை தடுத்து நிறுத்தினார்கள் போராட்டக்காரர்கள்.

துய்போங் வனத்துறை கேட் அருகே வன்முறை கும்பலுக்கும், பாதுகாப்பு படையினருக்கும் இடையே மோதல் வெடித்தது. கும்பல் கற்களை வீசியது. அதனால், பாதுகாப்பு படையினர் தடியடி நடத்தியும், கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் கும்பலை கலைத்தனர். அதிகாலைவரை மோதல் நீடித்தது.

20 மாதங்கள் கழித்துதான் பதவி விட்டு விலகினார் முந்தைய முதலமைச்சர் பிரேன்சிங். இன்றைய முதலமைச்சர் பதவி ஏற்ற அன்றே வன்முறை அரங்கேறி இருக்கிறது. புதிய அரசில் இணைந்துள்ள குக்கி எம்.எல்.ஏக்களை "சமூகப் புறக்கணிப்பு" செய்ய வேண்டும் என அழைப்பும் விடுக்கப்பட்டுள்ளது. 'அடுத்து நடக்க இருக்கும் விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பு' என்று அறிவித்துள்ளார்கள். எனவே வன்முறை இப்போதைக்கு நிற்கும் எனத் தெரியவில்லை.

**மணிப்பூரில் எப்படியாவது பா.ஜ.க. ஆட்சி அமைத்து விட வேண்டும், பா.ஜ.க.வைச் சேர்ந்தவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்க வேண்டும் என்று நினைத்தார்களே தவிர, மணிப்பூர் பிரச்சினையை தீர்க்க முயலவில்லை. உண்மையான பிரச்சினை என்ன, அதற்கு என்ன செய்ய வேண்டும் என்ற எந்த ஆலோசனையும் செய்யவில்லை.**

**மணிப்பூர் மலைவாழ் பழங்குடி மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கு, வாழ்வாதாரம் மேம்பாட்டுக்கு எதையும் செய்யவில்லை. காடுகள் பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரால், மலைவாழ் மக்களை வதைத்தார்கள். மலைவாழ் மக்களது வாழுமிடங்களில் உள்ள வீடுகளை இடித்தார்கள். மலைவாழ் மக்கள் கஞ்சா பயிரிடுவதாகச் சொல்லி தொடர்ந்து ஒடுக்கினார்கள். பா.ஜ.க.வைச் சேர்ந்த மலைவாழ் இன எம்.எல்.ஏ.க்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கூட பா.ஜ.க. தலைமை செவிமடுக்கவில்லை. பிறகு எப்படி அமைதி திரும்பும்?**

**பா.ஜ.க. இருந்தால் எரியும், மீண்டும் வந்தாலும் எரியும் என்பதைத் தான் மணிப்பூர் காட்டுகிறது.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.2.2026) சென்னையில் நடைபெற்ற, அப்பல்லோ ஹனிஃபா அவர்களின் மகள் அஸ்ரா – கமர் ஆதில் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். உடன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ், முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜே.எம்.ஆரூண் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

## நாகுடியில் தமிழ்நாடு தலை குனியாது பொதுக்கூட்டம்!

### பொன். முத்துராமலிங்கம்- அமைச்சர் எஸ்.ரகுபதி சிறப்புரை!

புதுக்கோட்டை. பிப்.9–

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக, அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி சார்பில் 'தமிழ்நாடு தலை குனியாது' பொதுக்கூட்டம் நாகுடியில் நடைபெற்றது.

அறந்தாங்கி தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் பொன். கணேசன் வரவேற்றார்.

அறந்தாங்கி நகர் மன்ற துணைத் தலைவர் தி.முத்து நன்றி கூறினார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சருமான எஸ். ரகுபதி தலைமை தாங்கி, ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்காமல் வஞ்சிக்கும் பாஜக அரசை கண்டிக்கும் வகையில் பொதுமக்களுக்கு அல்வா வழங்கி பேசினார்.

அறந்தாங்கி முன்னாள் சட்டமன்ற உறுப்பினும், ஆவுடையார் கோவில் வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளருமான உதயம்சண்முகம், மணமேல்குடி வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் சக்தி ராமசாமி, ஆவுடையார்கோவில் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் பொன் துரை, அறந்தாங்கி நகர தி.மு.க. செயலாளர் க.ராஜேந்திரன், அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் இரா. ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் அமைச்சரும், தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான பொன்.முத்துராமலிங்கம் சிறப்புரையாற்றினார். நிகழ்வில்

தி.மு.க. தீர்மானக்குழு துணைத் தலைவரும், அறந்தாங்கி தொகுதி பார்வையாளருமான சுப.த.திவாகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.ஆர்.கே.கலைமணி, மாவட்ட துணைச் செயலாளர் அடைக்கலம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன், பொதுக்குழு உறுப்பினர் வீரையா, மாவட்ட நெசவாளர் அணித் தலைவர் பழனியப்பன், மாவட்ட சுற்றுச்சூழல் அணித் தலைவர் ஆவுடையூனுஸ், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சக்திவேல், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் விமலாதிராஜன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பாத்திமாபீவி, தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் அறந்தாங்கி செந்தில்வேலன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் இரா.தமிழ்ராசு, நசுருதீன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் சின்னையா, பாஸ்கரன், முகமதுநலீம், செந்தில்வேலன், குத்புதீன், துரைராஜ், ஒன்றிய அவைத் தலைவர்கள் ராமலிங்கம், உமாபதி, நகர அவைத் தலைவர் சுப்பிர மணியன், நகரத் துணைச் செயலாளர் ராமசாமி, ஒன்றியத் துணைச் செயலாளர்கள் மாலதிகணேசன், பால்ராஜ், பால சுப்பிரமணியன், மாவட்ட பிரதிநிதிகள் ராஜேந்திரன், கணபதி, மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், வட்டக்கழக கிளைக்கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கேள்விக் கென்ன பதில் ?

**பாமரனின் கேள்வி:**

பிரதமர் மோடி, அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் ஏன் இப்படி அஞ்சி நடுங்குகிறார் ?

**சுப்ரமணியன்சாமியின் பதில்:**

"பிரதமர் மோடியின் வண்டவாளங்களை தண்டவாளத்தில் ஏற்றியுள்ளார் சுப்பிரமணியன்சாமி.

பிரதமர் மோடி குறித்து சுப்பிரமணியன் சாமி அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

**"சீனாவும் அமெரிக்காவும் மோடியின் ஆவணங்களை வைத்திருக்கின்றன, அதனால்தான் மோடி இந்த நாடுகளுக்கு அஞ்சுகிறார்."**

**"மோடி முதல்வராக இருந்தபோது, ஆடம்பரம் மற்றும் உல்லாசத்திற்காக 16 முறை சீனா சென்றார். ஜெய்சங்கர் அவரது உல்லாச ஆடம்பரங்களை நிர்வகித்து வந்தார்."**

என்ற சாமியின் பதில் வலைத் தளங்களில் வலம் வருகிறது !

தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

## "நலம் காக்கும் ஸ்டாலின்" பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம்!

### அமைச்சர்கள் கே.ஆர்.பெரிய கருப்பன் – மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தனர்!

சிவகங்கை, பிப்.9–

சிவகங்கை மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் "நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம் ஆகியவைகளை தொடங்கி வைத்து, பார்வையிட்டனர்.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்கள் ஆகியோர், சிவகங்கை மாவட்டம், கல்லல் வட்டாரத்திற்குட்பட்ட குன்றக்குடி, தருமைக் கயிலைக் குருமணி மேல்நிலைப்பள்ளியில் நேற்று முன்தினம் (7.2.2026) தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம் ஆகியவைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, அவர்கள் தலைமையில், தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கள் மற்றும் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி அவர்கள் ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில், முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி, பொதுமக்களின் நலன் காத்து வருகிறார்கள். குறிப்பாக, முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் பல்வேறு சிறப்பு திட்டங்களை அறிவித்து, அதன் வாயிலாக தரமான மருத்துவ சேவைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர்.

அதில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, இதயம் காப்போம், பாதம் பாதுகாப்போம், நடப்போம் நலம் பெறுவோம், சிறுநீரகம் பாதுகாக்கும் சீர்மிகு திட்டம், மக்களைத் தேடி மருத்துவ ஆய்வக திட்டம், தொழிலாளர்களைத் தேடி மருத்துவ திட்டம், செயற்கை கருத்தரித்தல் மையங்கள் என ஏராளமான திட்டங்கள் மக்களின் நலன் காக்கின்ற வகையில் பயன்பாட்டில் உள்ளது.

அத்திட்டங்களைத் தொடர்ந்து, கடந்த ஆகஸ்ட் 2–ஆம் தேதியன்று "நலம் காக்கும் ஸ்டாலின் எனும் புதிய திட்டமானதும், முதலமைச்சர் அவர்களால் சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது.

இம்முகாமானது, தமிழகம் முழுவதும் 388 வட்டாரங்களில் 1,164 முகாம்களும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 முகாம்களும், 10 இலட்சம் மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள 5 மாநகராட்சிகளில் 20 முகாம்களும், 10 இலட்சம் மக்கள் தொகைக்கு குறைவாக உள்ள 19 மாநகராட்சிகளில் 57 முகாம்களும் என ஆக மொத்தம் 1,256 முகாம்கள் நடத்திட அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 1,140 முகாம்கள் நிறைவு பெற்றுள்ளது. இதன் வாயிலாக 17,03,683 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் 39 முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டு, இதுவரை 33 முகாம்கள் நிறைவு பெற்றுள்ளது. இம்முகாம்களின் வாயிலாக மொத்தம் 41,022 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். மேலும், இன்றையதினம் கல்லல் மற்றும் கண்ணங்குடி வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் இரண்டு முகாம்களும் என இன்றையதினம் வரை இம்மாவட்டத்தில் 35 முகாம்கள் நிறைவு பெறுகிறது.

மேலும், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் மாவட்ட அளவிலான நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு இன்றையதினம் சிறப்பு மருத்துவ முகாமானது, நலம் காக்கும் ஸ்டாலின் முகாமுடன் இணைந்து நடைபெறுவது சிறப்பான நிகழ்வாக அமைந்துள்ளது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் காலங்களில் சிறந்த கல்வி சேவையும், பொதுமக்களுக்கு சிறந்த மருத்துவ சேவையும் வழங்கும் பணியில் தன்னை அர்பணித்துக் கொண்டு, சிறப்பாக சேவையினை வழங்கியுள்ளார்கள். அன்னார் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி, சிறந்த மருத்துவ சேவையினை பொதுமக்கள் பெற்றிடும் பொருட்டு, இம்முகாம்களானது சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இம்முகாம்களில், பொது மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம்,எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், மன நல மருத்துவம், நுரையீரல் மருத்துவம், நீரிழிவு மருத்துவம்,கதிரியக்கவியல் மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, சித்தா மற்றும் இந்திய முறை மருத்துவம் போன்ற 17 வகையான சிறப்பு மருத்துவ சேவைகள் மட்டுமன்றி, முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அட்டைகளும், மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, தமிழகம் முழுவதும் நடைபெற்ற முகாம்களின் வாயிலாக 46,287 நபர்கள் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அட்டைகள் மற்றும் 56,866 மாற்றுத்திறனாளிகள் மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ்கள் பெற்று பயனடைந்துள்ளனர்.

குறிப்பாக, இம்முகாம்களில் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் முழு உடல் பரிசோதனைகள், மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல், முதல மைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்தல் போன்ற இணைச் சேவைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், இன்றையதினம் தமிழகம் முழுவதும் 23 மாவட்டங்களில் 38 இடங்களில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமானது சிறப்பாக நடைபெற்று வருகிறது. குறிப்பாக, அரியலூர், காஞ்சிபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டிணம், பெரம்பலூர், இராணிப்பேட்டை, நீலகிரி, தேனி, திருப்பத்தூர், வேலூர் ஆகிய 10 மாவட்டங்களில் திட்டமிட்டபடி முகாம்கள் முழுவதுமாக சிறப்பாக நிறைவு பெற்றுள்ளதும் பெருமைக்குரிய ஒன்றாகும்.

மருத்துவத்துறைக்கு மேலும் சிறப்பு சேர்க்கின்ற வகையில், முதலமைச்சர் அவர்களின் இரண்டு மிகப் பெரிய சிறப்பு திட்டங்களான ரூபாய் 417 கோடியே 7 இலட்சம் மதிப்பீட்டில் உலகிலேயே மிகப்பெரிய குழந்தைகளுக்கான பிரத்யேக மருத்துவமனை ஆராய்ச்சி மையமும், பெண்களை அதிகம் பாதிக்கும் கர்ப்பபை வாய் புற்றுநோயினை தடுப்பதற்கு ஏதுவாக முன்னெச்சரிக்கையாக செலுத்தப்படும் HPV தடுப்பூசி பணியும் கடந்த சில நாட்களுக்கு முன்னர் சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்தடுப்பூசி பணியின் மூலம் 14 வயதுடைய சுமார் 3,38,679 இளம் பெண்கள் பயனடையவுள்ளனர்.

பெண்கள் கர்ப்பபை வாய் புற்றுநோயிலிருந்து பாதுகாப்பதற்கு, உலக அளவில் முதல் முறையாக தமிழகத்தில் HPV தடுப்பூசி செலுத்தும் பணி, சிறப்பாக நடைபெறுவது சிறப்பிற்குரிய ஒன்றாகும்.

இந்நிகழ்ச்சியில், முதல்வர் (பொ) சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மரு.ஜடாமுனி, இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.ஜெயகீதா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு. மீனாட்சி, திருப்பத்தூர் வட்டாட்சியர் மாணிக்கவாசகம், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பாலகிருஷ்ணன், வட்டார மருத்துவ அலுவலர் மரு.ஜெ. ஆல்வின் ஜேம்ஸ் மற்றும் சுகாதாரத்துறையை சார்ந்த மருத்துவர்கள், அலுவலர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.2.2026) துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வ.உ.சி சாலையில் (வால்டாக்ஸ் சாலை) 13.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள முதல்வர் திருமண மாளிகையை திறந்து வைத்து, 10 இணையர்களின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர். பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, நிலைக்குழுத் தலைவர் மருத்துவர் கோ. சாந்தகுமாரி, மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.